**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 03-ஆம் நாள், செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 19-ம் நாள் செவ்வாய்க்கிழமை

இ.ம.எண். 13/2026 ன் அ.வ.எண்.285/2013

சுசீலா தேவி ... மனுதாரர் / வாதி

/எதிர்/

1) ஆசிர்வாதம்

2) செல்லப்பா

3) சுதந்திரமணி

4) ராஜேஸ்வரி

5) சுந்தர்ராஜீ அம்மாள் (இறப்பு) ... எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது 25.02.2026 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், 1வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.A.டேவிட்சன் அவர்கள் ஆஜராகியும், 2வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T. வீரமோகன ராய் அவர்கள் ஆஜராகியும், 3,4 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாகியுள்ள நிலையிலும், 5வது எதிர்மனுதாரர்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.03.03 15:26:59 +0530

காலம்சென்றுவிட்ட நிலையிலும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

மனுதாரரால் இம்மனுவானது மனுதாரர் / வாதி தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்யும் பொருட்டு மனுதாரர் தரப்பை மீண்டும் திறக்க உத்தரவிட வேண்டி பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது நிலுவையில் இருக்கும்போது 2ம் பிரதிவாதி தவறான உயிலை பெற மனு தாக்கல் செய்துள்ளார். அதில் செல்லத்தங்கம்மாள் மனுதாரரின் தந்தையின் மனைவி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் அவர் என் தந்தையின் மனைவி அல்ல. மேற்படி செல்லத்தங்கம்மாள் அடமான பத்திரத்தை அடமானம் வைத்திருந்தார். மனுதாரருக்கு 24.09.1981 தேதியிட்ட நாகூர் மீரான் என்பவரால் செல்லத்தங்கம்மாள் பெயருக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட குறித்த விபரம் தற்போது தான் தெரியவந்தது. அந்த ஆவணத்தில் மேற்படி செல்லத்தங்கம்மாள் ரெங்கசாமி நாடார் என்பவரின் மனைவி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி ஆவணத்தை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.03 15:27:07 +0530

மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யும் பொருட்டு அசல் வழக்கினை மீண்டும் திறக்க உத்தரவிட வேண்டி இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>1வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>:**

மனுதாரரது மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரரால் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல. மனுதாரர் தாக்கல் செய்ததாக கூறப்படும் ஆவணனம் மோசடியான ஆவணம் ஆகும். அது செல்லத்தங்கம்மாளுக்கு பாத்தியப்பட்ட ஆவணம் அல்ல. செல்லத்தங்கம்மாளின் குடும்பத்தில் பிரச்சினையை உருவாக்கும் வகையில் மேற்படி ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரரால் இம்மனுவானது அசல் வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3. **<u>2 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>:**

மனுதாரரது மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் கூறும் 24.09.1981 தேதியிட்ட ஆவணத்திற்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. அந்த ஆவண விபர சொத்துக்களும், இவ்வழக்கு சொத்தும் வேறாகும். அதுபோல் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செல்லத்தங்கமோ, நாகூர் மீரான் என்பவரோ இவ்வழக்கில் தரப்பினர்கள் இல்லை. மேலும், மேற்படி

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.03 15:27:21 +0530

ஆவணத்தில் கண்ட செல்லத்தங்கமும், இவ்வழக்கு உயிலில் கண்ட செல்லத்தங்கமும் வெவ்வேறு நபர்கள் ஆவார்கள். வழக்கு நோக்கிற்காக வழக்கிற்கு சம்மந்தமில்லாத செல்லத்தங்கம் என்பவர் பெயரில் உள்ள ஆவணத்தை வாதி தாக்கல் செய்து வழக்கை இழுத்தடிக்க முயற்சி செய்து வருகிறார். எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில், மனுதாரருக்கு 24.09.1981 தேதியிட்ட நாகூர் மீரான் என்பவரால் செல்லத்தங்கம்மாள் பெயருக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட குறித்த விபரம் தற்போது தான் தெரியவந்தது. அந்த ஆவணத்தில் மேற்படி செல்லத்தங்கம்மாள் ரெங்கசாமி நாடார் என்பவரின் மனைவி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் அவர் என் தந்தையின் மனைவி அல்ல. எனவே, மேற்படி ஆவணத்தை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யும் பொருட்டு அசல் வழக்கினை மீண்டும் திறக்க உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என கூறியுள்ளார்.

அசல் வழக்கானது விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதால் மனுதாரருக்கு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், மனு தள்ளுபடி செய்யபட்டால் மனுதாரர் பாதிக்கப்படுவார் என்பதாலும், மனுதாரர் தரப்பை மீண்டும் திறக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.03 15:27:30 +0530

இறுதியாக, இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் வருடம் மார்ச் மாதம் 03-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.03 15:27:37 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.03 15:27:42 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

முு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.13/2026 இன்

அ.வ.எண்.285/2013

தேதி.03.03.2026